சுருக்கம்

"அண்ணன் சீர் திட்டம்" – அரசின் சார்பாக எட்டு கிராம் தங்க நாணயமும், ஒரு பட்டுப் புடவையும் வழங்கும் அண்ணன் சீர் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் [சந–3(2)] துறை

அரசாணை (நிலை) எண்.27 நாள் 05.10.2026.

ஸ்ரீ பராபவ, புரட்டாசி 18

திருவள்ளுவர் ஆண்டு 2057

படிக்க:

1. 2026–27 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டு உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு, நாள் 05.08.2026.
2. சமூக நல இயக்குநரின் கடித ந.க.எண்.2682323/மந1(1)/2026, நாள் 11.08.2026.
3. இந்திய தேர்தல் ஆணையத்தின் கடித எண்.100/டிஎன்–எல்ஏ/1–2/2026/எஸ்எஸ்–1/எம்சிசி, நாள் 26.09.2026

*******

<u>ஆணை</u>

தமிழர் மரபில் திருமணத்தின் போது அண்ணன் வழங்கும் 'சீர்' என்பது அன்பு, பாசம், பாதுகாப்பு மற்றும் பொறுப்பின் அடையாளமாகக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 5 இலட்சம் திருமணங்கள் நடைபெறுகின்றன. திருமணங்களில் மணப்பெண்களுக்கு அரசு அண்ணனாக பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலனில் எப்போதும் அக்கறை கொண்டு துணை நிற்கும் என்ற உறுதியை வெளிப்படுத்தும் விதமாக, புதிய வாழ்க்கையைத் தொடங்கும் மணப்பெண்களுக்கு அன்புப் பரிசாக எட்டு கிராம் தங்க நாணயமும், ஒரு பட்டுப் புடவையும் வழங்கப்பட வேண்டும் என்பது அரசின் தொலைநோக்கு ஆவணத்தின் ஒரு திட்டமாகும். இதனையடுத்து, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட 2026–27 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டு உரையில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. இவ்வறிவிப்பின் தொடர்ச்சியாக, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல இயக்குநர், "அண்ணன் சீர்" திட்டத்தை ஆண்டுதோறும் செயல்படுத்த நிர்வாக அனுமதியும், நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த நிதி ஒதுக்கீடும் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. மேற்காண் கருத்துரு நன்கு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்கண்டவாறு "அண்ணன் சீர்" திட்டத்தை செயல்படுத்த, அரசு ஆணை வெளியிடப்படுகிறது:-

I. (அ) தமிழ்நாட்டில் ரூ.2.5 இலட்சத்திற்குள் ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்களில் உள்ள பெண்களுக்கு திருமணத்தின் போது 8 கிராம் தங்க நாணயமும், ஒரு பட்டுப்புடவையும் வழங்கும் "அண்ணன் சீர்" திட்டத்தை ஆண்டுதோறும் செயல்படுத்த நிர்வாக அனுமதியும், இதற்கான தொகையாக நடப்பு நிதியாண்டில் முதற்கட்டமாக ரூ.812 கோடிக்கு (ரூபாய் எண்ணூற்று பன்னிரெண்டு கோடி மட்டும்) நிதி ஒதுக்கீடும் செய்யப்படுகிறது.

(ஆ) வழங்கப்படும் பலன்கள்

தமிழ்நாட்டில் நடைபெறும் திருமணங்களுக்கு, தமிழ்நாட்டைச் சேர்ந்த, தகுதியுடைய மணப்பெண்களுக்கு 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமும், ஒரு பட்டுப் புடவையும் வழங்கப்பட உள்ளன.

(இ) இத்திட்டத்திற்கான தகுதி மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் தனியே வெளியிடப்படும்.

(ஈ) திட்டத்தின் கொள்முதல் செயல்முறை

தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 (Tamil Nadu Transparency in Tenders Act, 1998) மற்றும் விதிகள் 2000-ன்படி திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, தகுதியான ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கப்பட்டு தங்க நாணயமும், பட்டுப் புடவையும் கொள்முதல் செய்யப்படும்.

(உ) விலை நிர்ணயம்

தங்க நாணயத்தின் கொள்முதல் விலை கொள்முதல் ஆணை வழங்கப்படும் நாளன்று காலை IBJA (India Bullion and Jewellers Association) அமைப்பால் நிர்ணயிக்கப்படும் விலையை அடிப்படையாக கொண்டு நிர்ணயிக்கப்படும்.

II. இத்திட்டம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைபெறும் திருமணங்களுக்கு பொருந்தும். இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

4. இவ்வரசாணை நிதித் துறையின் மின் அலுவலக எண். 15058192/நிதி(சந)/2026, நாள் 24.09.2026 மற்றும் இந்திய தேர்தல்



ஆணையத்தின் கடித எண்.100/டிஎன்-எல்ஏ/1-2/2026/எஸ்எஸ்-1/எம்சிசி, நாள் 26.09.2026-ல் பெறப்பட்ட இசைவுகளுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ம. பல்லவி பல்தேவ்,**